**கவனிக்க.**- 2007.07.20 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1508 - 2007 ජූලි 27 වැනි සිකුරාදා - 2007.07.27

*1508 ஆம் இலக்கம் - 2007 ஆம் ஆண்டு யூலை மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 612 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 612 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.**- (i) மாத்தறை இராகுல கல்லூரி பழைய மாணவர் கழகம் (கொழும்புக் கிளை) (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2007, யூன் மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(ii) ஸ்ரீ பியரத்தன சமூக அபிவிருத்தி மற்றும் சமூக அடிப்படை மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2007, யூன் மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(iii) ஹெம்டன் விலேஜ் இலங்கை நம்பிக்கைப் பொறுப்பின் நம்பிக்கைப் பொறுப்பு சபை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2007, யூலை மாதம் 06 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2007, ஒகத்து 03 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2007, யூலை 20 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2007 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான கம்பனியை கூட்டிணைத்தல் அறிவித்தல்*

*கம்பனியின் பெயர்* : குளோபல் குளோதின் இன்டர்நெஷனல் (பிறைவேட்) லிமிட்டெட்

*பதிவு இலக்கம் :* PV 60306

*கூட்டிணைக்கப்பட்ட திகதி :* 18.06.2007

*கம்பனியின் பதிவு செய்யப்பட்ட முகவரி :* இல. 8 B. E. P. Z. பியகம, மல்வான, ஸ்ரீ லங்கா.

7- 506

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ், கீழே காட்டப்பட்ட கம்பனியை கூட்டிணப்பதற்கான அறிவித்தல்*

*கம்பனியின் பெயர்* :டோட்டல் எனார்ஜி அன்ட் மெனேஜ்மன்ட் சலூஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் (TOTAL ENERGY MANAGEMENT SOLUTIONS (PVT) LIMITED

*பதிவு இலக்கம் :* PV 60129

*பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தின் முகவரி :* இல. 102A, டி மெல் வத்த வீதி, கொஸ்வத்த, நாவல, ராஜகிரிய

*கூட்டிணைக்கப்பட்ட திகதி :* 2007, யூன் 1 ஆந் திகதி

பணிப்பாளர்,
டோட்டல் எனார்ஜி அன்ட் மெனேஜ்மன்ட்
சொலூஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்.

7- 507

---

# ஏல விற்பனைகள்

**கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் - அவிசாவளைக் கிளை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

**சப்பிரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டம், பண்வல கோறளை மூன்று கோறளையில் தெஹியோவிட்ட பிரதேச சபை எல்லைக்குள் மடொல்ல கிராமத்தில் அமைந்துள்ள எரிபிரட் எஸ்டேட் காணியில் நிலஅளவையாளர் என். பி. எல்விட்டிகலவின் 14.11.1994 ஆம் திகதி வரைபடம் இலக்கம் 546 காண்பிக்கப்பட்ட லொட் 53 இக் காணி ஏலவிற்பனை**

**விஸ்தீரணம் : (0ஏ. 0றூ. 12பே.) அல்லது (0.0304ஹெக்டெயர்)**

*(கடன் எடுத்த கிரெரியன் ரன்ஜித் லியனகே மற்றும் ராஜபக்ச கமகே நயனா பத்மினி ராஜபக்ச என்பவர்கள் மேற்படி காணியை கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட்டிற்கு ஈடுவைத்துள்ளனர்.)*

வரையறுக்கப்பட்ட கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் விபரிக்கப்பட்ட ஆதனத்தை அதே இடத்தில் என்னால் 2007, ஒகத்து மாதம் 22 ஆந்திகதி காலை 11.30 மணிக்கு பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

**ஆதனத்திற்குச் செல்லும் விதம்.**- அவிசாவெல்ல நகரத்திலிருந்து இரத்தினபுரி பிரதான வீதியூடாக 3 கிலோ மீட்டர் செல்லவும் இரத்தினபுரி பிரதான வீதியில் இருந்து மிக பெரிய அபிருத்திக்காக ஒதுக்கப்பட்ட காணியின் ஊடாக உள்ள பாதையில் சென்று 75 மீட்டர் பிரதான வீதியில் இருந்து இக்காணி அமைந்துள்ளது.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்காக**.- 07.03.2003 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும் 10.03.2003 ஆந் திகதியுடைய "லங்காதீப", " த ஜலண்ட்" மற்றும் "தினகரன்" ஆகிய பத்திரிகைகளையும் ஏலவிற்பனை விளம்பரத்துக்காக 27.07.2007 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும் 31.07.2007 ஆந் திகதியுடைய "லங்காதீப", " த ஜலண்ட்" மற்றும் "தினகரன்" ஆகிய பத்திரிகைகளைப் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை**.-ஏலவிற்பனை இறுதியில் உத்தேசக் கொள்வனவாளர் பின்வரும் கட்டணங்களை பணமாக செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% ;

(2) உள்ளூராட்சிக்கான விற்பனை வரி 1% ;

(3) ஏலதாரரின் தரகு பணமான 2 1/2% ;

(4) விற்பனைப் பத்திரத்தை தயாரிப்பதற்கான நொத்தாரிசு கட்டணமாக ரூபா 2,000 ;

(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணமாக ரூபா 500 ;

(6) விற்பனையின் நிமித்தம் ஏற்பட்ட எல்லா விளம்பரச் செலவுகள்;

(7) கொள்வனவு விலையின் மிகுதி 90% ஏலத் திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட்டின் பிரதான அலுவலகத்தில் அல்லது அவிசாவளை கிளையில் செலுத்த வேண்டும்.

உரித்துறுதிகளையும் மற்றும் அவை தொடர்பான ஆவணங்களையும் பின்வரும் இடத்தில் பெற்றுக் கொள்ள முடியும் :-

"முகாமையாளர், கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட், 56, யட்டியாந்தோட்டை வீதி, அவிசாவளை - தொலைபேசி இல. 036-2231301, 036-2231303-4 ; பெக்ஸ் இல. : 036-2231302"

எல். பி. சேனாநாயக்க ஜே.பி.,
முத்த உத்தரவுபெற்ற ஏலதாரர்
விலைமதிப்பிடுநர், வர்த்தக மேல் நீதிமன்றம்
மற்றும் கொழும்பு மாவட்ட நீதிமன்றங்களுக்கான
நீதிமன்ற ஆணையாளர்,
அரசாங்க மற்றும் வர்த்தக வங்கிகளின்
சிரேட்ட உத்தரவுபெற்ற ஏலதாரர்.

இலக்கம் 99, புதுக்கடை வீதி,
கொழும்பு 12.
தொலைபேசி/பெக்ஸ் இல. : 011-2445393.

7-582